2017 ஜூலை 14] **[பேரவைத் தலைவர்]**

உட்காருங்கள். நான் இதில் மேற்கொண்டு விவாதம் செய்வதற்கு அனுமதிக்கமாட்டேன். உட்காருங்கள். இதோடு இப்பிரச்சினை முடிந்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–35

(இ) வால்பாறை தொகுதி, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஆழியாற்றில் கலப்பதைத் தடுத்து விவசாயிகளின் தேவைக்கு வழங்குதல்

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமானியனும் அரசாள முடியும் என்பதற்குச் சான்றாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியை, தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) வால்பாறை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகள், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், ஆனைமலை ஒன்றியம் மற்றும் கோவை மாநகராட்சியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்குத் தேவையான குடிநீர், ஜீவநதியான ஆழியாற்றிலிருந்து மோட்டார் பம்புசெட்டுகள் மூலமாக எடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுகிறது. இதன்மூலம் சுமார் 8 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் சில இடங்களில் ஆழியாற்றில் கலக்கிறது. சுத்திகரிக்கும் நிலையங்களை நவீன முறையில், தற்போதைய நீர்வரவின் தேவைக்கேற்ப மாற்றியமைத்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை ஆற்றில் கலக்கச் செய்யாமல் விவசாயிகளுடைய தேவைக்கு முழுமையாக வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த ஆற்றிலே படர்ந்திருக்கிற ஆகாயத் தாமரையை நீக்கித் தர வேண்டுமென்றும், சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கும், நிருவகிப்பதற்கும் பேரூராட்சிகளில் போதிய நிதி இல்லாத சூழ்நிலையில், அரசாங்கத்தின் சார்பாக அவற்றையெல்லாம் அமைத்துக் கொடுத்து, சிறப்பாகச் செயல்படுத்தித் தர வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர் போன்ற பேரூராட்சிகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஆழியாற்றில் கலப்பது குறித்துப் பேசினார்கள். ஆனைமலை பேரூராட்சியில் 2004 ஆம் ஆண்டு மக்கள்தொகை சுமார் 16 ஆயிரமாக இருந்த நிலையில், சமன்பாட்டு நிதியிலிருந்து ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, பேரூராட்சியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதிகரித்துள்ள மக்கள்தொகை காரணமாக குடியிருப்புப் பகுதிகளிலிருந்து அதிகமான கழிவுநீர் வெளியேறி வருவதாலும், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு அதிகமான பொதுமக்கள் வந்து செல்வதால் அதிகமான கழிவுநீர் வெளியேறி வருவதாலும், மேற்படி சுத்திகரிப்பு நிலையம் முழுத் திறனோடு செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது திரவக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின்மூலம், பேரூராட்சியிலிருந்து திரவக் கழிவை முழுமையாகச் சுத்திகரிப்பு செய்வதற்கு ஏதுவாக கலந்தாலோசகர்மூலம் உரிய திட்ட வடிவமைப்பு செய்து, உரிய நிதி ஆதாரம் பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.*

வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி 9 குக்கிராமங்களை உள்ளடக்கியது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அங்கு மக்கள்தொகை 17,392 ஆகும். வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் அடங்கியுள்ள 1, 2 மற்றும் 3 ஆம் வார்டின் ஒரு பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மட்டுமே, ஆற்றின் கிளை ஆறான உப்பாற்றில் கலக்கிறது. வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியின் இதர பகுதிகளிலிருந்து வெளியேறும் நீர், அப்பகுதியிலுள்ள விவசாயப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழியில், முன்னோடித் திட்டமாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் (Septage Management) *மேற்கொள்ளப்பட்டு, சோதனை ஓட்டத்தில் உள்ளது. அதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட இரண்டு பேரூராட்சிகளில் மக்கள்தொகை அடிப்படையிலும், வெளியேறும் கழிவுநீர் அளவின்*

2017 ஜூலை 14] **[திரு. எஸ்.பி. வேலுமணி]**

அடிப்படையிலும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அங்கிருக்கக்கூடிய சுத்திகரிப்பு நிலையங்களை நிருவகிப்பது பற்றியும், ஆகாயத் தாமரையை அகற்றித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதே கோரிக்கையை மாண்புமிகு வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் சகோதரி திருமதி கஸ்தூரி வாசு அவர்களும் வைத்துள்ளார்கள். இதற்குமுன்னர், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், 2006 ஆம் ஆண்டில் அந்தப் பகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் உள் ஒதுக்கீடு குறித்த அரசாணையை உயர் நீதிமன்றம் தடை செய்துள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, என்ன சொல்ல வேண்டும் என்பதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–40

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையில், உயர் நீதிமன்றமும் தற்போது ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 85 சதவிகித இடங்கள்* State Board; *15 சதவிகித இடங்கள்* C.B.S.E *மாணாக்கர்களுக்கும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்கு உயர் நீதிமன்றம் தற்போது* stay *வழங்கியிருக்கிறது. இன்று தர வரிசைப் பட்டியல் வெளியிடுவதாக அறிவித்திருந்தீர்கள். 17 ஆம்*